
# தமிழகம் - தற்கொலையில் முதலிடம்!





86

# சுட்டி

மாத இதழ்

FREE E - BOOKS , www.thamizham.net ,

# பதில்கள்

? பெண்கள் திருமணம் செய்யாமல் வாழ்வதும் ஒரு வாழ்க்கையா ?

**மேரி கோரெல்லி :** திருமணமா ! நான் எதற்காகத் திருமணம் செய்துகொள்ள வேண்டும்? நான் செல்லமாக ஒரு நாயையும், ஒரு கிளியையும், ஒரு பூனையையும் வளர்க்கிறேன். ஒரு கணவன் என்ன காரியங்களைச் செய்வானோ அவற்றை இந்த மூன்றும் செய்துவிடுகின்றன; நாயோ காலையில் எழுந்தது முதல் குரைத்துக்கொண்டே இருக்கிறது. கிளி, தன் பங்கிற்குப் பகல் முழுவதும் திட்டுகிறது. பூனையோ இரவில் வீட்டில் தங்குவதே இல்லை, வெளியே போய்விடுகிறது.

? எந்தத் தகுதியைக் கொண்டு வேலை தேடி வந்தீர் ?

**பெஞ்சமின் பிராங்ளின் :** இரண்டு தகுதிகள்தாம் தற்போது என்னிடம் உள்ளன. 17 குழந்தைகளைப் பெற்றெடுத்த பெற்றோருக்குப் 14வது குழந்தையாகப் பிறந்தது ஒரு தகுதி. சோற்றுக்கு இல்லாமல் வறுமையால் வாடுகிறேனே, அது இரண்டாவது தகுதி.

? காங்கிரஸ் எப்படியிருக்கிறது ?

**சுபாஷ் சந்திரபோஸ் :** காங்கிரஸ் தலைவர்களின் மனங்களில் தெளிவற்றத் தன்மையும், கட்டுப்பாடுகளும் நிறைந்துள்ளன. அவர்களின் திட்டங்கள் விட்டுக் கொடுத்து ஒத்துப்போகிற இணக்கங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். அதாவது நிலப்பிரபுவிற்கும் குத்தகைதாரர்களுக்கும் இடையில், முதலாளிக்கும் உழைப்பாளர்களுக்கும் இடையில் இணக்கங்களை ஏற்படுத்துவது போன்று பாவ்லா காட்டிக் குழப்புவது அவர்கள் வேலை. இவர்கள் திட்டம் இந்தியாவிற்கு வெற்றி ஏற்படுத்தித் தராது !

? மிகுந்த பயனுடையது புத்திசாலித்தனமா அல்லது கல்வியா ?

**எட்வர்ட் விக்காம் :** புத்திசாலித்தனத்தைப் பார்க்கிறபோது கல்வி இல்லாமல் காலம்தள்ள முடியும் என்று தோன்றுகிறது. கல்வியைப் பார்க்கிறபோது புத்திசாலித்தனமில்லாமலே காலம் தள்ளிவிட முடியுமென்று தோன்றுகிறது.

? கலையும் விஞ்ஞானமும் எங்கிருந்து தோன்றியவை ?

**ஜார்ஜ் தாம்சன் :** உழைப்பிலிருந்து ! கலையும் விஞ்ஞானமும் ஒன்றுக்கொன்று ஆதாரமாக உள்ள இரு வகைப்பட்ட வடிவங்கள். விஞ்ஞானிக்கு கற்பனை தேவை. கலைஞனுக்கு விஞ்ஞானப் பூர்வமாக அணுகிப்படைக்கும் திறமை தேவை.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சிவாஜியிடம் நான்கு கேள்விகள்



1) உங்கள் திரைப்பட மார்க்கெட் வீழ்ந்து விட்டது; அரசியலிலும் நீங்கள் ஒதுக்கப் பட்டுவிட்டீர்கள். உங்கள் செல்வாக்கில் ஏற்பட் டுள்ள வீழ்ச்சியைச் சரிகட்டவும், உங்கள் பக்கம் கவனம் திரும்பவும் நீங்கள் வெடித்த குண்டுதான் "தமிழக முன்னேற்ற முன்னணி" என்பது சரிதானா?

2) கடைசி காலத்தில் இந்திராவோடு கடும் கருத்து வேறுபாடு கொண் டிருந்தவர் காமராசர். காங்கிரஸ் இரண்டாகப் பிரிந்தபோது நீங்கள் காமராசரைத் தீவிரமாக ஆதரித்தீர்கள், ஆனால் காமராசர் காலமான பின் அவரது அரசியல் விரோதியான இந்திராவை அப்பட்டமாக எல்லாவிதத்திலும் உங்களால் எப்படி ஆதரிக்க முடிந்தது?

3) "அடிப்படையில் நான் காங்கிரஸ்காரன் இல்லை. 1955-இல் புகலிடம் தேடி காங்கிரஸ் வந்தேன். வாழ் வின் 30 ஆண்டுகளை காங்கிரசில் வீணாக்கிவிட் டேன். நான் பெரியாரின் சீடன்" என்று இவ்வளவு காலத்திற்குப் பிறகு கூறும் நீங்கள் இந்த பேருண் மையை மக்களிடம் கால் நூற்றாண்டு காலம் மறைத் தது சரியா? இப்போது தொடங்கியிருக்கும் புதுக் கட்சியும் உங்களது அடுத்த புகலிடம்தான் என்று நினைக்கும் மக்கள் உங்களை எப்படி நம்பப் போகிறார்கள்?

4) "என் ரசிகர் மன்ற பிள்ளைகள் என் சொந்தப் பிள்ளைகளைவிட எனக்கு நெருக்கமானவர்கள். அவர்களுக்காக நான் எதுவும் செய்வேன். அவர்கள் மடியில் சாக வேண்டும் என்பதுதான் என் ஆசை" எனக் கூறும் நீங்கள் ரசிகர் மன்றத்திற்காக உங்கள் சொத்தில் சிறு பகுதியையேனும் எழுதி வைத்திருக்கி றீர்களா? 'என் சொத்து அனைத்தும் என் கட்சியின் ரத்தத்தின் ரத்தங்களுக்கே' என்று சொன்ன எம். ஜி ஆரின் மேடைப்பிரகடனத்திற்கும் இதற்கும் வேறுபாடு உண்டா?

(அடுத்து : மூப்பனார்) —எழில்

> எம் ஜி.ஆர். தன் மனைவி ஜானகியுடனும், அண்ணன் சக்ரபாணியுடனும், தன் வீட்டிலுள்ள மற்றவர்களிடமும் எப்போதும் மலையாளத்தில்தான் பேசுவார். வெளியே வந்துவிட்டால் எல்லோரிடமும் தமிழில்தான் பேசுவார். இதைப்போல், இப்போது சிவாஜி வீட்டிலிருக்கும்போது தன் அம்மாவைத்தவிர மற்றவர்களிடம் இங்கிலீஷில்தான் பேசுகிறார். அம்மாவிற்கு இங்கிலீஸ் தெரியாது. வரவர சிவாஜிக்கு இங்கிலீஷில் பேசுவதுதான் ரொம்பப் பிடிக்கி றது. இதைப் பார்க்கும்போது எம். ஜி. ஆரும், சிவாஜி யும் தொழிலுக்காகத்தான் தமிழில் பேசுகிறார்கள் என்று தோன்றுகிறது. எம். ஜி. ஆருக்குச் சரளமாக பேசவரும் மொழி, மலையாளம்! சிவாஜிக்கு ஆங்கிலம்!
>
> —கல்கண்டு/21-1-1965

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ஆங்கிலம் கட்டாயப் பாடமாகிறது தமிழ் விருப்பப்பாடமாகத் தொடர்கிறது

இனி தமிழகம் முழுவதிலும் உள்ள ஆயிரக்கணக்கான பள்ளிகளிலும், ஒன்றாம் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கட்டாயப் பாடமாக்கப்படுகிறது.

தமிழ் நாட்டில் புதியக் கல்விக் கொள்கை அமுலுக்கு வருவது குறித்து அமைக்கப்பட்டுள்ள மால்கம் ஆதிசேசய்யா குழுவின் அறிக்கையை, தமிழக அரசு முழு மனதோடு மகிழ்ந்து ஏற்று அடுத்த ஆண்டு முதல் அமுல்படுத்தப் போகிறது.

ஆனால் தமிழ் நாட்டில், தமிழைக் கட்டாயப் பாடமாக பள்ளிகளில் படித்தாக வேண்டும் என்று எந்த சட்டமும் சொல்லவில்லை.

தமிழ் நாட்டு பள்ளிக்கூடங்களில் கட்டாய ஆங்கிலத்துடன் 2-வது மொழியாக ஜெர்மன், பிரஞ்சு, சமஸ்கிரதம், இந்தி, தெலுங்கு, மலையாளம், போன்ற பிற மொழிகளைப் படிப்பது போல விருப்பப் பாடமாக தமிழையும் படிக்கலாம். தமிழை ஒரு பாடமாக படிக்கும் கட்டாயம் தமிழ்க் குழந்தைகளுக்குக் கூட கிடையாது. ஆனால் யாராக இருந்தாலும் ஒன்றாம் வகுப்பு முதல் ஆங்கிலம் படிக்காமல் தப்ப முடியாது. இது மாதிரி ஒரு நிர்பந்தம் ஐரோப்பாவிலோ, வடஇந்தியாவிலோ முன்னாள் ஆங்கில காலனி நாடுகளிலோ கூட இல்லை.

ஆங்கிலேயர்களை விட நம் தமிழ் ஆட்சியாளர்களுக்கு ஆங்கிலத்தின் மேல் உள்ள மோகவெறி நாளுக்கு நாள் கண்மூடித்தனமாக பெருகி வருகிறது "எங்கும் தமிழ், எதிலும் தமிழ், கல்லூரி பாடமொழி தமிழ், பெயர் பலகைகளில் தமிழ், ஆட்சி மன்றத்தில் தமிழ்," போன்ற வெற்று கோஷங்களெல்லாம் கேட்டுக் கேட்டுப் புளித்துப் போய் விட்டன.

முதலில் நம் குழந்தைகள் தாய் மொழியாம் தமிழை அடியோடு மறந்து ஆங்கிலமயமாவதைத் தடுக்க உடனடியாக ஏதாவது செய்வோம். பள்ளியில் தமிழைபடிப்பதை முதலில் கட்டாயமாக்குவோம். இந்தியினால் தமிழுக்கு ஏற்படப்போவதாகக் காட்டப்படும் அபாயத்தை விட, ஆங்கிலக் கல்வியை வளர்க்க நம் தமிழ் அரசியலார் காட்டும் அளவு கடந்த ஆசையே தமிழுக்கு பேராபத்தை விளைவிக்கும். இந்நிலை தொடர்ந்தால் வரப்போகிற தமிழ்த் தலைமுறைக்குத் தமிழ் எழுத, பேச, படிக்க முடியா அபாயம் நேரிடுவது உறுதி

—எழில்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# கே. ஆர். விஜயா தேவதையா?

மலேசிலாவிருந்து வந்திருந்த தமிழ்ப் பெண்மணி ஒருவரின் தீராத ஆசை நடிகை கே. ஆர். விஜயாவை ஒரு முறையாவது தரிசிக்க வேண்டும் என்பதாகும். சினிமா நிருபர் ஒருவரின் உதவியால் ஸ்டுடியோ ஒன்றில் நுழையும் வாய்ப்பும் அங்கு தெய்வீக மேக்கப்பில் ஜொலித்துக் கொண்டிருந்த கே. ஆர். விஜயாவைச் சந்தித்துப் பேசும் வாய்ப்பும் அந்தப் பெண்மணிக்குக் கிடைத்தது.

ஒளி வெள்ளத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்த நடிகை கே. ஆர். விஜயாவைக் கண்டவுடன் அந்தப் பெண்மணி பிறந்த பயனை அடைந்தது போல மெய் மறந்து, உடல் சிலிர்த்து "உங்களைப் பார்த்தது தெய்வத்தைப் பார்த்ததைப் போல இருக்கிறது" என்று நெக்குருகக் கூறினார். கே. ஆர். விஜயா தனக்கே உரிய புன்சிரிப்புடன், அவரிடம் பேசி விடை கொடுத்தார்.

ஸ்டுடியோவை விட்டு வெளிவந்தவுடன், இந்த அம்மையாரின் பாமரத்தனத்தால் திகைப்புண்ட அந்த சினிமா நிருபர் "அம்மா! நீங்கள் நினைப்பது போல, நடிகை விஜயா தேவதை அல்லள் வழிபாட்டிற்குரியவரோ, பின்பற்றுதலுக்குரியவரோ அல்லள்" என்று கூறி நடிகையர்களின் திரைக்குப்பின் உள்ள வாழ்வின் உண்மைகளை விளக்கியிருக்கிறார். அந்த அம்மையார் அதிர்ச்சியடைந்திருக்கிறார்.


"தமிழ் நாட்டில் போற்றுதலுக்கும், பின்பற்றுதலுக்குமுரிய பெண்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நீங்கள் ஏன் போய் பார்க்கக் கூடாது. கருணாநிதி நகரில் 29 வயதான ஒரு பெண்மணி 110 அநாதைக் குழந்தைகளை வளர்க்க தன் சொத்தையே செலவழித்து வருகிறார். பெண்கள் முன்னேற்றத்திற்காகவும், தொழிலாளர் முன்னேற்றத்திற்காகவும் தங்கள் சொந்த சுகங்களை இழந்து, பொது வாழ்விற்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ள எத்தனையோ பெண்களையெல்லாம் நீங்கள் கண்டு கொள்வதேயில்லை. இவர்கள் நடிகைகளையெல்லாம் விட எவ்வளவோ உயர்ந்தவர்கள்" என்று அந்த சினிமா நிருபரே உணர்த்தினார்.

விளக்கையே தேடும் நம் வீட்டு விட்டில் பூச்சிகளுக்கும் இந்த ஞானம் வரவேண்டும்.

—புஸ்வாணன்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

அறிவியல் விந்தை



# தொலைக்காட்சி மாயாஜாலக் கண்ணாடியாகிறது!

வங்கியில் பணம் செலுத்த, பணம் எடுக்க, பத்திரிகைகளுக்குச் சந்தா கட்ட, சந்தாதாரளுக்குப் பத்திரிகை அனுப்ப, மின் கட்டணம், தொலைபேசிக் கட்டணம் கட்ட, ஊர்களுக்குச் செல்ல டிக்கெட் வாங்க—இதுபோன்ற எண்ணற்ற வேலைகளை டிவி மூலம் வீட்டிலிருந்தபடியே முடித்து விடலாம். மளிகைக் கடை, துணிக் கடைகளை டிவியிலேயே பார்த்து தேவையானவற்றைத் தரம்பார்த்து தேர்ந்தெடுத்து விடலாம். வாடிக்கையாளர் அடையாள அட்டை எண்ணைக் கொடுத்து டிவி மூலமே பொருட்களை வாங்கியும் விடலாம். இதெல்லாம் கனவல்ல. மேலை நாடுகள் சிலவற்றில் அன்றாடம் நடந்து வருவதுதான்.

இதென்ன ஸ்பெஷல் டிவியா என்று ஆச்சரியப்பட வேண்டாம். வீட்டிலுள்ள டிவியை நகரின் மையத்திலுள்ள பெரிய கம்ப்யூட்டருடன் டெலிபோன் ஒயர்கள் மூலம் இணைத்து விடுகின்றனர். டெலிபோனில் எண்களைச் சுழற்றுவதுபோல 0 முதல் 9 முடிய எண்கள் கொண்ட கால்குலேட்டர் போன்ற தோற்றமுடைய கீ போர்டை உபயோகித்து கம்ப்யூட்டருடன் தொடர்பு கொண்டால் போதும். இந்த ராட்சத மைய கம்ப்யூட்டர்கள் ஏகப்பட்ட விஷயங்களை வாங்கி சேகரித்து வைத்துள்ளன. ஒவ்வொரு நபருக்கும் ஒரு தொலைபேசி எண் இருப்பது போல ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும், ஒவ்வொரு வேலை செய்வதற்கும் ஒரு தொலைக்காட்சி எண் உண்டு. அந்த எண்ணைத் தட்டி விட்டால் தேவையான நிகழ்ச்சியைப் பார்க்கலாம். அல்லது தேவையான வேலையை முடித்துக் கொள்ளலாம். வேண்டிய திரைப்படம், நாடகம், நடனம், கண்காட்சி, இவற்றை தேர்ந்தெடுத்துப் பார்க்கலாம். நூலகங்களில் உள்ள நூல்களைத் தேர்ந்தெடுத்து திரையிலேயே படிக்கலாம். சரித்திர ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட இடங்களை அப்படியே காண்பித்துப் பாடம் நடத்தலாம். இப்படி நமது டிவியை நமது வேலைக்காரணாக்கிக் கொள்ள இந்த கம்ப்யூட்டருக்கு ஒரு தொகை கட்டினால் போதும.

'வீடியோ டெக்ஸ்' என்ற பெயருடன் இயங்கும் இந்த விஞ்ஞான தொழில் நுட்பம் பிரிட்டனில் 1975 செப்டம்பர் 23 முதல் பொது மக்கள் சேவையாக இயங்க ஆரம்பித்து இன்று பல நாடுகளில் பரவியுள்ளது. நமக்கு எப்போது வருமோ?

—நிலா

FREE E - BOOKS , www.thamizhthamizh.net.,



# பழங்காலத்தில் லஞ்சம் உண்டா?

நமது முன்னோர்கள் அனைவரும் மிகவும் ஒழுக்க சீலர்கள், இப்போது தான் நாம் கெட்டழிந்து விட்டோம் என்று பேசுவது அபத்தம்.

பழங்காலத்தில் பல சீர்கேடுகள் இருந்தது போல லஞ்ச லாவண்யமும் இருக்கவே செய்தது. தனியுடைமை சமுதாயம் ஒழிக்கப்படும் வரை லஞ்சமும் இருந்தே தீரும். அன்றைய இலக்கியங்களும், இதிகாசங்களும் லஞ்சம் இருந்ததைத் தெளிவாக உறுதிப்படுத்துகின்றன.

மனுவும், கௌடில்யரும், புத்தரும் லஞ்சம் பெறுவார்க்கு வழங்கும் தண்டனை பற்றிக் குறிப்பிட்டுள்ளனர்.

கௌடில்யருடைய காலத்தில், காவல்துறையினர், இரவுக் கால காவலர்கள், திருடர்கள், குற்றவாளிகள், விபச்சாரிகள், சூதாட்ட விடுதிக்காரர்கள் ஆகியோரிடம் லஞ்சம் பெற்றுக் கொண்டு, சமூக விரோத செயல்கள் தொடர ஆதரவளித்ததற்கான ஆதாரங்கள் உள்ளன.

எல்லைக் காவலர்கள், அப்பாவி பயணிகளை மிரட்டி, பின் சில்லறை பெற்றுக் கொண்டு வழி விட்டதாக கவி காளிதாசர் கூறுகிறார் (மாலவிகாக்கினிமித்திரம் காண்டம் 5)

மகாபாரதத்தில் நீதிபதிகளே லஞ்சம் வாங்கியதற்கான சான்று உள்ளது : பிரகஸ்பதி, இளவரசனிடம், தான் நீதிபதிக்கு லஞ்சம் வழங்கியும் கூட அவர் மோசமாக நடத்தப் பட்டதாகவும், எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டதாகவும் முறையிடுகிறார்.

வடமொழி ஜடகங்கள், கள்வனைக் காதலித்த இரு பெண்களைப் பற்றிப் பேசுகின்றன. அரண்மனை நாட்டியக்காரி சாமா, காவலரிடம் சிக்கிக் கொண்ட தன் காதல் கள்வனை மீட்க, ஆளுநருக்குப் பெருந்தொகை வழங்கினாளாம். சுளாரா என்ற இன்னொரு நாட்டிய மாது, தான் காதலித்த கொள்ளைக் காரனை தண்டனையிலிருந்து காப்பாற்ற, தான் வாழ்நாளில் சம்பாதித்த அத்தனை பணத்தையும் காவல்துறை உயர் அதிகாரிக்கு வழங்கியிருக்கிறாள்.

வறுமையும், அடிமைத்தனமும் போல நம் இரத்தத்தில் லஞ்சமும் ஊறியிருக்கிறது. இது ஓர் அவல நோய்; இந்தப் பரம்பரை நோயை நம் அடுத்த தலைமுறைக்கேனும் பரவாமல் தடுத்தாக வேண்டும்.

—இசு.

FREE E - BOOKS , www.thamizham.net.,

நூல் விமர்சனம் :

# சொந்த தேசத்து அகதிகள்

கோ. வசந்த குமாரன்

தமிழ் சினிமாவுக்கென்று ஒரு ஃபார்முலா இருப்பது மாதிரி கவிதைத் தொகுதிக்கு காதல் தோல்வி, காதல் சிறப்புரைத்தல், வரதட்சணை எதிர்ப்பு, விதவை மறுமணம், புரட்சி.

எனவேதான் கவிதைத் தொகுதிகள் தோல்வியடைந்து வருகின்றன. மேத்தா, வைரமுத்து தவிர மற்றவர்களின் புத்தகங்கள் முதற்பதிப்பிலேயே முற்றுப்பெற்றுவிடுகின்றன. ஒரு மாறுதலுக்காக சிலர் ஹைக்கூ கவிதைப் பக்கம் தாவினார்கள். ம்ஹூம் வாசகர்களைக் கவரும் முயற்சிகள் தோல்வியடைந்து விட்டன.

'சொந்த தேசத்து அகதிகள்' தொகுதி புதிய பாதையைப் போடாவிட்டாலும் சற்று மாறுதலானது. இதில் உள்ள கவிதைகளில் சில கவிதைகளாகவும், சில கவிதையைப் போலவும் அமைந்திருக்கின்றன.

இவரது கவிதைகளைப் பார்க்கும்போது பொழுது போக்கிற்குக் காதலித்திருப்பதாகத் தோன்றுகிறது. ஆனால் கவித்துவம் இவரைக் காப்பாற்றிவிடுகிறது. 'விளக்கணைத்த பிறகும் அவள் வெட்கப்பட்டாள். ஓ! சன்னலோரம் ஒரு மின்மினிப் பூச்சி!' வள்ளுவன் காமத்துப்பாலில் விட்டுவிட்டதை வசந்தகுமார் பிடித்துவிட்டார் - 'நான் மீன் உண்ணுவதில்லை அவை உன் விழிகளைப் போலிருப்பதால்' என்கிற கவிதையில் உலோக கால உவமையாகிய விழி-மீன் விஷயம் கொஞ்சம் வித்தியாசப்படுகிறது. அவ்வளவு தான்!

காதல் அல்லாத கவிதைகளும் நிறைய இருக்கின்றன. அவை சமூகத்தை மேலோட்டமாக விமர்சனம் செய்கின்றன. 'ஒரு ஏழை ஏப்பம் விடுகிறான் நேற்றிரவு கனவில் சாப்பிட்ட ரொட்டித் துண்டுக்கு' போன்ற கவிதைகளில் ஆழமிருக்கின்றன. இவர் இன்னும் தன்னை ஆழ அகலப்படுத்திக் கொள்வாராயின், காலம் மறந்துவிட முடியாத கவிஞர்களின் பெயர் பட்டியலில் இவர் பெயர் கட்டாயம் இருக்கும்.

சில கவிதைகள் :

'சிலரது இலட்சியங்கள் நெருப்பின் மீது விழுந்த நீர்த் துளியாய் ஆவியாகி விடுகின்றன'

'இந்த சமுதாயம் பூக்களைச் சிதைத்து அத்தர் பூசிக்கொள்ளும்'

'என்னிடம் இருப்பதோ நாற்பது ரூபாய் முப்பதில் காபரே! பத்துக்கு பகவத் கீதை'

'சுதந்திர தினத்தன்று சிறைச்சாலைகளில் நெரிசல்!'

...உலக பிரஜை

[நர்மதா பதிப்பகம், 16, ராஜாபாதர் தெரு, சென்னை-17. விலை ரூ. 7-50]

FREE E - BOOKS , www.thamizham.net

# நமது நவமணி மருத்துவம்

தொன்று தொட்டு நம் நாட்டில் புழங்கி வரும் நவ மணிகள் வெறும் ஆடம்பரத்துக்கு மட்டும் உரியனவல்ல. மணிகளுக்கு உளவியல் பண்புகளும் மருத்துவ குணங்களும் உண்டு என்று நம் பழைய நூல்களும், சித்த மருத்துவம் கூறுகின்றன.

1. **கோமேதகம் :** இரத்த சோகை நீக்கும், பித்தம் தொடர்பான கோளாறுகளைக் குணப்படுத்தும்.

2. **நீலம் :** இதய நோய்களுக்கு நல்லது; கண் பார்வையைவலுப்படுத்தும்; விஷக்கடிகளின் நஞ்சை அகற்றும். நெருக்கடியில் தளராத மன உறுதியும் மன அமைதியும் கிடைக்க உதவும்.

3. **பவளம் :** இரத்தத்தில் உள்ள "கொலஸ்டிராலை"க் குறைக்கும். இதய ரத்த உறைவைத் தடுக்கும்; வயிற்றுப்புண்ணை ஆற்றும்; இரத்த அழுத்தத்தைக் குறைக்கும். இருமல், ஆஸ்துமா, மூலம், பேதியை குணப்படுத்தும்.

4. **புட்பராகம் :** வயிற்று நோய்கள், குஷ்டம் இவற்றை போக்கும். ஆண்மையைப் பெருக்கும்; உடலில் அணிந்திருக்கும்போது, நோய் வரப்போவதை அறி விக்கும் வகையில் தன் நிறத்தை மாற்றிக்காட்டும்.

5. **மரகதம் :** நரம்பு சம்மந்தமான நோய்கள், கண் நோய்கள் நீங்கும்; நஞ்சுகளைச் சீரழிக்கும்; பயம் போக்கும்.

6. **மாணிக்கம் :** வெட்டுக்காயத்தில் வைத்தால் இரத்தம் வடிவது நிற்கும்; நச்சுப் பிராணிகளைக் கொல்லும்.

7. **முத்து :** உடலுக்குக் குளிர்ச்சி தரும்; நீண்ட வாழ்நாள் பெற உதவும்; பெண்களின் மலட்டுத் தன்மையை நீக்கும்; கணவன் மனைவி தாம்பத்திய ஒற்றுமையை வளர்க்கும்.

8. **வைடூரியம் :** கடிவாயில் வைத்தால் நஞ்சை முறிக் கும். கண் பார்வையை வலுப்படுத்தும்; காய்ச்சலைக் குணப்படுத்தும்; நீண்ட வாழ்நாளும் நலமும் பெற உதவும்.

9. **வைரம் :** கெட்ட கனவுகள் வராமல் தடைசெய்யும்; பைத்தியம், குஷ்டம் இவற்றைக் குணபடுத்தும்.

மேற் கண்ட நவ மணிகள், முற்றிலும் போலி யின்றி இருந்து உடலில் அணியும்போது இப்பலன் கள் கிடைக்கக்கூடும். யாரும் விஞ்ஞான பரிசோதனை களுக்கு இப்பலன்களை இதுவரை உட்படுத்திய தகவல் கிடைக்கவில்லை. பலன் பெற்றோர் தெரி விக்கலாம்.

...சித்தன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

## 'எம்.ஜி.ஆர். மறைவால் தமிழகத்தில இருண்ட சூழ்நிலை மறைந்தது! "...யாருக்கும் அஞ்சாமல் தென் மொழி பெருஞ்சித்திரனார் உண்மைகளை எழுதுகிறார் !

ம. கோ. இரா. (எம். சி. ஆர்.) மறைந்தார் ! தமிழகத்தின் இருண்ட சூழ்நிலை மறைந்தது. ஆம் ! அறிவார்ந்த நிலையில், தமிழின நலம் கருதும் உண்மையான நோக்குடனும் நடுநிலையான பார்வையுடனும், சிறிதும் விருப்பு வெறுப்பற்ற மனவுணர்வுடனும் கூறினால், தமிழகத்தின் மேல் கடந்த பத்தாண்டுகளாகப் போர்த்திருந்த இருண்ட சூழ்நிலை ம. கோ. இரா. வின் மறைவால் மறைந்தது என்றே சொல்ல வேண்டும்.

ம. கோ. இரா. வாழ்ந்த பொழுது, தம்மை இழிவுபடத்திட்டித் தம் கமுக்கமான செயல்களை அம்பலப்படுத்திய கண்ணதாசன் போன்றவர்களுக்கு இலக்கக் கணக்கில் பொருளுதவியும், பட்டம் பதவிகளும் தந்து, அவர்களின் வாய்களை அடைத்ததுடன், தம்மைப் போற்றியும் புகழ்ந்தும், எழுதவும் வைத்தார். அத்துடன் இவர் பற்றிய வரலாற்றை, இவருக்குச் சார்பாகக் கற்பித்தும், வளைந்தும் எழுதிய புலவர் சிலர்க்கு இலக்கக் கணக்கில் கொடுத்து அவர்களை ஊக்கியும் வந்தார். அவரைப் பாராட்டி வந்தவர்கள் சிலர் தங்கள் நிலையில் சிறிது மாறியதாகத் தெரிய வந்த பொழுது, அவர்கள் தூக்கி எறியப்பட்டார்கள்; விலக்கப்பட்டார்கள்; கீழிறக்கப்பட்டார்கள்; அழிக்கப்பட்டார்கள். இவ்வகையில், நூற்றுக் கணக்கான திரைப்பட நடிகர்களையும், நடிகைகளையும், தொழில் நுணுக்கத் திறவோர்களையும், இவருக்குச் சார்பாக இல்லையென்ற காரணத்திற்காக அவர்கள் வளர்ச்சியைத் தடுத்தும் அவர்கள் வாழ்க்கையைக் கெடுத்தும் பழிவாங்கிய கொடுமை உள்ளங்கொண்டவர், அவர்.

இது மலிவான ஒரு நாலாந்தர, ஐந்தாந்தர அரசியல் தந்திரமே தவிர வேறு அன்று. இன்னுஞ் சொன்னால், இஃது அரசியலில் கரவான உத்தியும், வஞ்சகமான போக்கும், தந்நலமான நடைமுறையும், சூழ்ச்சியான திறமையும், நாடகத்தனமான ஆளுமையும் கொண்டது. இவ்வழி முறைகளுக்கெல்லாம் நடுவணரசை இவர் துணையாகவும்; வழிகாட்டியாகவும் பயன்படுத்திக் கொண்டார். அதற்குக் கைம்மாறாக இவர் தமிழகத்தையே அவர்களிடம் அடகு வைத்தார்; காட்டிக் கொடுத்தார்; வஞ்சித்தார்.

நன்றி : தென்மொழி

FREE E - BOOKS , www.thamizham.net.,



# மேடைப் பேச்சில் அநாவசிய அழைப்புரை

தமிழ் நாட்டில் அரசியல், இலக்கிய, சமயக் கூட்டங்களுக்குப் பஞ்சமில்லை. நேரப் பஞ்சம் நிறைந்த அவசர யுகத்தில் இவற்றில் மிகச்சிறந்ததை மட்டுமே தேர்ந்தெடுத்துச் செல்லக்கூட பலருக்கு நேரமில்லை.

இச்சூழலில் கூட்டத்திற்கு வருவோரின் கால வறுமையைப் புரிந்துகொள்ளாமல், காலத்திற்கு ஒவ்வா ஒரு வழக்கம் மேடைப் பேச்சாளர்கள் பலரிடம் இருக்கிறது. பேச்சாளர் பேச வேண்டிய விஷயத்தைத் தொடங்கும் முன், கூட்டத்திற்கு வந்துள்ள தலைவர், பிற பேச்சாளர்கள், முக்கிய மனிதர்கள், அவையினர் ஆகியோரைப்பற்றி, ஒவ்வொருவராக அழைத்து, ஒவ்வொருவரையும் வர்ணித்து ... தலைவர் அவர்கள் ..... செயலாளர் அவர்களே ! என்று நீட்ட்ட்டிக்கொண்டே போவதை மேடை மரபாக வளர்த்துவைத்திருக்கிறோம்.

பேசும் நேரத்தில் கால் பங்கு நேரத்தை இந்த அநாவசிய அழைப்புரைக்குச் செலவிடுவோர் பலருண்டு. மரியாதை வேண்டாமென்று சொல்லவில்லை, அதற்காக ஒவ்வொருவரையும் அடைமொழிபோட்டு, ஒவ்வொரு பேச்சாளரும் திரும்பத் திரும்ப அழைப்பதால் ஏற்படும் மொத்த கால விரயத்தை எண்ணுங்கள். சில பேச்சாளர்கள் இப்படி வர்ணிப்பது, வர்ணிக்கப்படுவோர் சிலரை வேண்டுமானால் குளிர்ச்சிப்படுத்துமேயன்றி, கேட்க வந்திருப்போருக்கு இந்த வெற்றுரை சலிப்பையே தரும்; இந்த நேரத்தில் வேறு பயனான கருத்தைச் சொன்னாலாவது நன்மையுண்டு.

பல கூட்டங்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் முடியாமல், கூட்டம் முடிவதற்கு முன், அவையினர் மெல்ல, கொஞ்சம் கொஞ்சமாக நழுவ நேரிடுகிறது. ஆங்லத்தில் எந்தக்கூட்டமாயினும் Ladies and Gentlemen என்று அழைக்கும் மரபு பின்பற்றுதலுக்குரியது. தமிழில் அன்பார்ந்தவர்களே அல்லது அன்பிற்குரிய அவையினரே என்று ஆரம்பித்தால் என்ன ?

பேசுவோரின் சிறப்பு பேசும் கருத்தில்தானே தவிர, அழைப்புரையில் இல்லை.

... திருச்சியான்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# கோவி. மணிசேகரனும் ராஜேஷ்குமாரும்

கோவி. மணிசேகரனைப்பற்றி உங்களுக்கெல்லாம் தெரியும். தன்னைத்தானே மேதை என்று நம்புகிறவர். கடுகளவும் வரலாற்று அறிவின்றி கதையை வளர்த்துபவர். 'எம். ஜி. ஆர். இறந்தால் அடுத்த வினாடி இறப்பேன்' என்று கூறியவர். இதுவரை எம். ஜி. ஆர். இறந்த சேதி அவருக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம். ஜெயலலிதாவும் எம். ஜி. ஆரோடு இறந்திருப்பேன் என்று கூறியதால் இவர் எழுதுவதை விட்டுவிட்டு, ஜெயலலிதாவுக்காக ஓட்டு கேட்கலாம்.

ராஜேஷ்குமார் கோவியைப்பற்றி கூறும்போது, "சரித்திர கதைகள் எழுதுவதற்கு அறிவுத் தேவையில்லை. நூலகமும் பக்கத்து வீடும் போதும்" என்று சொன்னாராம். உடனே அவர்மீது பாய்ந்து விட்டார் கோவி.

'தம்பி ராஜேஷ்குமார் சகலமும் கற்ற மகாபண்டிதராக இருக்கலாம். ஏனையவர் சிந்தனையற்ற முட்டாள்களா? துப்பறிவதை விட்டுவிட்டு துப்பக் கற்றுக் கொண்டது வெயிலின் கோளாறுதானே! தம்பியின் நாவல்கள் ஒரு கப் ரத்தம் முதல் எங்கிருந்து இறக்குமதி? எந்தநூலகம் என்று துப்பறிய முனைந்துவிட்டால், பிறகு தொழில் முறை கசந்து விடும். இன்னும் குற்றியலுகரம் முற்றியலுகரம் தெரியாமல் கதை எழுதுகிறோம் என்பதை மறக்கக் கூடாது."

இருவரும் மேலும் மேலும் சண்டை போட்டுக் கொண்டால் பல உண்மைகள் புலப்படும் - ராஜேஷ்குமார் தனது கதைகளை எங்கிருந்து நகல் எடுக்கிறார்; கோவியார் சரித்திரத்தை எப்படி திசைதிருப்புகிறார் என்று தெரியவரும். இருவருமே எதிர் எதிர் முனையில் நின்று கொண்டு வியாபாரம் செய்கிறார்கள். இவர்களுக்குள் யார் பெரியவன் என்கிற போட்டி ஏன்?

75,000 பிரதிகள் என்று பெரிதாகப் போட்டு சமீபத்தில் ராஜேஷ்குமாருக்கு போஸ்டர் அடித்திருக்கிறார்கள். எத்தனை பிரதிகளாக இருந்தால் என்ன?...? இவர்கள் சண்டையில் ஒன்றுதெரிகிறது. கோவியைப் போலக் கதை எழுத அறிவு தேவையில்லை. ரா. குமாரைப் போல கதை எழுத ஒரிஜினாலிட்டி தேவையில்லை.

... மிஸ்டர். ஓய்

FREE E - BOOKS , www.thamizham.net.,



# தமிழகம் தற்கொலையில் முதலிடம்

இந்தியாவில் தற்கொலை செய்து கொள்வோர் ஆண்டுக்கு 50,000 பேர். இதில் 5,000 பேர் தமிழகத்தைச் சார்ந்தவர்கள். தமிழகம், இந்தியாவின் தற்கொலையில் முதல் இடம் வகிக்கிறது.

(தினகரன் : 10-3-88)

இந்திராவின் கொலையை ஒட்டி இந்திய மக்கள் வெளிப்படுத்திய துன்ப முறை வேறு, தமிழர் வெளிப்படுத்திய துன்ப முறை வேறு; இந்திரா இறப்பைத் தாளாமல் 4 தமிழர் தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்டனர் ; 3 பேர் தூக்கிலிட்டுக் கொண்டும் ஒருவர் நஞ்சுண்டும், 7 பேர் நெஞ்சு அதிர்ச்சியாலும் மாய்ந்தனர்.

ஒரிசாவிலுள்ள கட்டாக்கில் ஒருவர் தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்டார். அவரும் தமிழரே; மலேசியாவில் ஒரு தேநீர்க் கடைக்காரர் தூக்கிலிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். அவரும் தமிழரே ;

இந்திரா பிறந்த உ. பி. யிலோ, அவர் குடும்பத்தின் பிறந்தகமான காஷ்மீரிலோ, அவரைத் தேர்ந்தெடுத்த ஆந்திரத்திலோ, அவர் தம் கட்சி ஆட்சியிலுள்ள கேரளத்திலோ, வேறு பிற மாநிலங்களிலோ யாரும் தற்கொலை செய்து கொண்டு விடவில்லை.

1311-ல் மாலிக்காபூரின் இசுலாமியப்படைகள் திருச்சிக்குப் பக்கத்தில் உள்ள ஓர் ஊர் நோக்கி வரும் போது, *"அவ்வூர் மக்கள் அனைவரும் ஊரின் திறந்த வெளிக்குத் திரண்டனர். ஆண்கள், பெண்கள், முதியோர், இளையோர், குழந்தைகள் என்று இன்ன பிறர், அவர்களுடன் கூடத் தாம் வளர்த்த ஆடுகள், மாடுகள் அனைத்தையும் ஒருங்கு கூட்டினர். அனைவரையும் சுற்றிப் பெரிய விறகுகளைக் கொண்டு வந்து விறகு வேலி அமைக்கப்பட்டது. முடிவில், விறகு வட்டத்தின் உள்ளே திரண்டிருந்த ஊர் மக்கள், விறகுகளுக்குத் தாமே தீ மூட்டிக் கொண்டனர். அனைவரும் கதறிக் கதறித் தீயில் வெந்து செத்தனர்."*

இச் செயலை நேரில் பார்த்த கத்தோலிக்கத் துறவியார்கள் அன்று போப்பிற்கு எழுதிய குறிப்பு இது.

பகைவரை எதிர்த்து, ஆளுக்கு ஓர் ஆளைத் தீர்த்துக் கட்டுவோம் என எதிர் நின்று சமர் செய்ய வேண்டிய மக்கள் தாமே உயிர் துறந்து அந்நியர் வெற்றியை எளிதாக்கினர்.

... க. ப. அறவாணன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# டிக்கெட் இல்லாதவர்கள்

ரயில்களில் பயணம் செய்பவர்கள் டிக்கெட் எடுப்பார்கள் என்ற உத்திரவாதம் வழங்க முடியாது. அதுவும் சென்னை-தாம்பரம் செல்லும் மின்சார ரயில் பயணிகளில் பெரும்பாலோர் டிக்கெட் எடுப்பதில்லை. அதற்குக் காரணம் ரயில்வே நிர்வாக ஓட்டை உடைசல்கள்தான். பெரும்பாலான ஸ்டேஷன்கள் திறந்த வெளியில் நடக்கின்றன. ரயில் நின்றதும் டிக்கெட் கலெக்ட் செய்வதில்லை. அப்படி யாரேனும் வாசலில் நின்று சோதனைப் போட்டால் நழுவுவதற்குப் பல்வேறு செயற்கை வாசல்கள் இருக்கின்றன!


மின்சார ரயில் 5 நிமிடங்களுக்கு ஒன்று வருகிறது. பல்லாயிரக்கணக்கோர் ஏறி இறங்குகின்றனர். மூட்டை முடிச்சுகள் வேறு. இத்தனைக்கும் இடையே புகுந்து டிக்கெட் பரிசோதகர் சோதனைப் போடுவதென்பது முடியாதுதான்! டிக்கெட் எடுக்காது பயணம்செய்தால் அபராதம் உண்டு என்கிற பயத்தைப் பயணிகளுக்கு இன்னும் ஏன் ஏற்படுத்தவில்லை?!

மார்ச் 4-ம் தேதி திடீரென்று ரயில்வேயினர் சென்னை மின்சார ரயிலில் சோதனைப் போட்டார்கள். டிக்கெட் இல்லாது பயணம் செய்த 606 பேர் பிடிபட்டனர். அதிக சுமைகளை ஏற்றிச் சென்ற 244 பேர் பிடிபட்டனர். இவர்களிடமிருந்து ரூ. 35,000க்கும் மேற்பட்ட அளவில் அபராதமாக வசூல் செய்யப் பட்டது. டிக்கெட் இல்லாது பயணம் செய்பவர்கள் பெரும்பாலும் படித்தவர்களாம். பணம் வைத்திருப்பவர்கள்கூட டிக்கெட் எடுக்கவில்லையாம்! 20 கி.மீ. தொலைவிற்கே இத்தனைபேர் பிடிபட்டால் இந்தியா முழுவதும் எத்தனை கோடி பேர் இலவசமாக பயணம் செய்கிறார்கள். இதனால் எத்தனை கோடி அரசிற்கு நஷ்டம்.

ரயில்வே பட்ஜெட் வந்துவிட்டால் டிக்கெட், பிளாட்பார டிக்கெட், சுமைகள் போன்றவற்றிற்கு கட்டணம் அதிகரிக்கும். இதனால் பொதுமக்களுக்கு தாங்க முடியாத தொல்லை ஏற்படும். 'ஏன் ரயில்வே டிக்கெட் விலையை ஏற்றினீர்கள்' என்று கேட்டால் ரயில்வே நஷ்டத்தில் ஓடுகிறது என்று அரசு பதில் சொல்லும். இப்படி கோடிக்கணக்கானோர் இலவசமாக பயணம் செய்தால் ஏன் துண்டு விழாது? திருட்டுப் பயணிகளை ரயில்வே தடுத்தால், ரயில்வே டிக்கெட்டுகள் உயர வழி இல்லை!

—பார்வையாளன்

FREE E - BOOKS , www.thamizham.net.,




*பிற நாடுகள் :*

# பர்மா

நமக்கு மிக அருகிலிருந்தும், 'பர்மிய கூட்டாட்சி சோஷலிச குடியரசு' எனப்படும் பர்மாவைப்பற்றி பல செய்திகள் நமக்கு எட்டுவதில்லை. 1962-க்கு பிறகு பர்மா உலக நாடுகளிலிருந்து தன்னை ஒதுக்கிக் கொண்டுள்ளதே இதற்குக் காரணம்.

ஆசியாவில் முதலில் புத்த மதத்தைத் தழுவிய நாடு பர்மா. இன்னும் 85% பேர் பௌத்தர்களே. இதன் 6,78,034 ச.கிலோ மீட்டர்களில் சுமார் 4 கோடி மக்களே வாழ்கின்றார்கள், மொத்த மக்கட் தொகையில் 1% தமிழர்கள் உள்ளனர்.

ஆங்கிலோ பர்மியப் போரின் விளைவாக 1886-இல் பிரிட்டிஷ் இந்தியாவில் ஒரு பகுதியாக பர்மாவைச் சேர்ந்தனர். இதனை அவமானமாக பர்மியர் கருதினர். சுதந்திர உணர்வற்ற இந்தியக் கூலிப் படையே பிரிட்டிஷ் படையாக பர்மாவின்மேல் ஏவப்பட்டதால், இந்தியர்மேல் பர்மியர்களுக்கு வெறுப்பு இருந்தது விடாமல் கிளர்ந்தெழுந்த பர்மியரை அடக்கமுடியாமல் 1937-இல் பர்மாவை மீண்டும் தனிநாடாக்கினர்.

ஆங்கிலேயர் ஆட்சியில் இங்கு ஆங்கிலம் ஆட்சி மொழியான போதிலும், பர்மிய மொழியையும் 2-வது ஆட்சி மொழியாக நிலை நிறுத்தினர். இந்தியா மாதிரி ஆங்கிலம் பேசும் அடிமை அறிவு ஜீவி வர்க்கம் பர்மாவில் உருவாகவில்லை. பர்மிய மொழியே மக்கள் மொழி, வணிக மொழி என்கிற பிடிப்பை ஆங்கிலேய ஆதிக்கம் அகற்ற முடியவில்லை. விடுதலைக்குப்பின் ஆங்கிலம் முற்றிலும் அப்புறப் படுத்தப்பட்டு பர்மிய மொழியே எல்லா நிலைகளிலும் கோலோச்சியுள்ளது.

பர்மியர்களின் விடுதலைப் போராட்டம், ஆயுதம் தாங்கிய நேரடி, கொரில்லா போராட்டமாக, மக்கள் போராட்டமாக உருமாறி 1948-இல் ஆங்கிலேயர் அகற்றப்பட்டனர். 1962-இல் நீவின் தலைமையில் ராணுவம் ஆட்சியைக் கைப்பற்றி சோஷலிச நாடாக பர்மா பிரகடனப்படுத்தப்பட்டது. இன்று நாட்டின் பெரும்பாலான தொழிலும் வணிகமும், தேசிய மயமாக்கப்பட்டுள்ளன. தொழிற் சங்கம் அமைக்கவோ, வேலை நிறுத்தம் செய்யவோ தடையுள்ளது. தொடக்கக் கல்வி அனைவருக்கும் இலவசமாக ஆக்கப்பட்டதால், பெரும்பாலான மக்கள் கற்றவர்களாகவே உள்ளனர்.

1890-இல் அரிசி உற்பத்தியை நிறைந்த வருவாய் கிடைக்கும் தொழிலாக ஆங்கிலேயர் மாற்றியதால், வெற்று நிலங்களையெல்லாம் சாகுபடிக்குத் தயார் செய்ய பர்மியர்களுக்குப் பணம் தேவைப்பட்டது. அப்போது அங்கிருந்த தமிழ் வட்டிக்கடைக்காரர்கள் 120% வட்டியில் பர்மியர்களுக்குக் கடனளித்தனர்.

சென்ற ஆண்டு ஆசியா முழுவதும் ஏற்பட்ட வறட்சியால் உலகத்தின் முதல் நிலை அரிசி ஏற்றுமதி நாடாக இருந்த பர்மாவில், உள்நாட்டிலேயே அரிசிப் பஞ்சம்!


கடும் பொருளாதாரச் சீர்கேட்டையும், கறுப்புச் சந்தையையும், ஒழிக்கப் பண நோட்டுகளை அரசு மக்களிடமிருந்து பறித்தது. பதிலாக புது நோட்டுகளை இன்னும் வழங்கவில்லை. இளைஞர் கூட்டம் வேலையின்றித் தவிக்கிறது. பிழைப்பு நடத்த பலரும் கள்ளச் சந்தையில் இறங்கியுள்ளனர். தற்போது இந்தச் சூழலின் வெளிப்பாடாகவே பெரும் மாணவர் கிளர்ச்சி வெடித்துள்ளது.

காலனி ஆதிக்கத்தின் பாதிப்பாலும், தவறான பொருளாதாரத் திட்டங்களாலும், தங்க நாடென்று அழைக்கப்பட்ட பர்மா, ஆசியாவின் மிகப் பின்தங்கிய நாடாக சீரழிந்து வருகிறது. மாணவர் கிளர்ச்சி புது பர்மாவை உதயமாக்கலாம.

... உலகப்பன்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# வாசகர் எதிரொலி



- மார்ச் மாத சுட்டி கண்டேன். அத்தனையும் பாதுகாக்கப்பட வேண்டிய செய்திகள்.
  —மு. மொய்தீன், முருகப்பட்டி.
- அப்துல் ரகுமான் கவிதையைத் தேர்ந்தெடுத்து அவற்றின் தன்மைக்கேற்ப கார்ட்டூன் அமைத்து அட்டையை அலங்கரித்திருந்த விதம் சுட்டியின் அசாத்திய திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு
  — பி. எல். பரமசிவம், மதுரை-1.
- மூக்குக் கண்ணாடி பற்றிய செய்தியில் ஏன் இவ்வளவு எழுத்து மாறாட்டம்? ஒரு வேளை - படிப்பவர்களின் கண்ணாடிகளையும் கண்களையும் சோதித்துக் கொள்வதற்கு வசதியாகவா?
  — தங்க. உமாசங்கர், சென்னை-113.
- 'ஜெயலலிதாவிடம் நான்கு கேள்விகள்' பகுதியில் கேட்கப்பட்ட கேள்விகள் படுகாரம். அந்த நாலாவது கேள்வியை ஜெயலலிதா ஆதரவாளர்களும் ஜெயலலிதாவும் பதிலளித்தால் சிறப்பாக இருக்கும்.
  —வ. உ. சி. பாலகிருஷ்ணன், திருப்பரங்குன்றம்.
- கருவேப்பிலை நமக்கு உதவும் விதம் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. நான் டீ குடிப்பதை நிறுத்திக்கொண்டிருக்கிறேன் சார்!
  — டி. ரவி, கோடம்பாக்கம்.
- வியட்நாம் பற்றிய செய்திகள் பிரமிப்பூட்டுவன.
  — ஆர். பரமேஸ்வரன், பாளியன், மராட்டியம்.
- 'மாமன் மகளை மணக்கவேண்டாம்!' என்ற கட்டுரை பயனுள்ளது. சொத்துக்கள் கைமாறி வெளியே போய்விடக்கூடாது என்பதற்காக உறவினர்களுக்குள்ளேயே மணம் செய்விக்கும் சில சமூகத்தினர், இந்த முறை ஏற்படுத்தும் பாதிப்பை இனியேனும் புரிந்துகொள்வார்களா?
  ... எஸ். வியார், சேப்பாக்கம்.


*முறையாக யோகாசனம் கற்க அரியதோர் வாய்ப்பு!*

*சுட்டி அறம் சார்பில் விரைவில் யோகாசன வகுப்புக்கள் தொடங்கவிருக்கின்றன. எளிய முறையில் சிறந்த பயிற்சியாளர் பயிற்சி அளிக்கிறார். வாரம் இரு முறை வகுப்புகள். குறைந்த கட்டணம். சென்னை வாசகர்கள் பயனடையலாம். தொடர்பு கொள்க:*

*"சுட்டி அறம்"* AP-638, H-*பிளாக், அண்ணாநகர், சென்னை*-600 040.


FREE E - BOOKS , www.thamizham.net.,

# நகல்

**இடம் :** ஒரு நகரத்தின் பிரதான பகுதியில் பொதுக்கூட்டம்.

**பாத்திரங்கள் :** தலைவர் மணிமாறன், வட்ட மாவட்ட தலைவர்கள், கட்சி பிரமுகர்கள், பொதுமக்கள்.

**பின்னணி :** பிருமாண்டமான மேடை, வண்ண விளக்குகள், நூற்றுக்கணக்கான கார்கள், பொய், மோசடி, கறுப்புப்பணம்.

**மணிமாறன் :** (நிறைவுரையை ஆரம்பிக்கிறார்) பெரியோர்களே ... தாய்மார்களே ... ரத்

**ஒருவன் :** (இடைமறித்து) தன்மானச் சிங்கம், உலக மகாக் கவி தலைவருக்குப் பத்தாம் வட்ட செயலாளர் சார்பாக இந்த மலர்மாலையை மாணிக்க மாலையாகச் சூட்டுகிறேன்.

**மணிமாறன் :** தத்தின் ரத்தமான உடன் பிறப்புகளே ... (கைத்தட்டல்)

**இன்னொருவர் :** தலைவர் அவர்களுக்குத் தேர்தல் நிதியாக ரூ. 10ஐ அளிக்கிறேன்.

**மணிமாறன் :** மாவட்ட செயலாளர் மகேந்திரன் அவர்களே, சந்தனக் காட்டில் புகுந்த தென்றலைப் போலக் கவிதை படித்த மாதவரம் பேரூராட்சி ஒன்றியத் தலைவர் ரவிவர்மா அவர்களே ..!

**ஒரு பெண் :** (குழந்தையை எடுத்துக் கொண்டு மேடையில் ஏறி) இந்த குழந்தைக்கு எங்க தலைவர்தான் பெயர் வைக்க வேணும்.

**மணிமாறன் :** (பேச்சை தற்காலிகமாக நிறுத்தி குழந்தையை வாங்கி முத்தம் கொடுத்து) சிலம்பு காவ்யா என்று பெயர் சூட்டுகிறேன்.

**பெண் :** இது பொம்பளை குழந்தை தலைவரே !

**மணிமாறன் :** சிலம்பு காவ்யன் என்று பெயர் வைக்கிறேன். (கைத்தட்டல். அந்தப் பெண்ணை மேடையிலிருந்து பலவந்தமாக இறக்குகிறார்கள்) இந்த நாட்டில் ஏழைகள் பெருகிக் கொண்டிருக்கிறார்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே மூன்றாண்டுகளுக்கு முன் 18 சதவீதத்தினர் இருந்தார்கள். இப்போது முப்பது சதவீதமாகிவிட்டது. பாரதி சொன்னான் தனியொருவனுக்கு உணவில்லையெனில் ... (கைத்தட்டல்)

(கூட்டம் முடிகிறது)

**குடிமகன் - 1 :** நம்ம தலைவரு என்னமா பேசறாரு. எவ்வளவு விஷயம் அவரிடம் இருக்கு.

**பிரஜை - 2 :** அவர் பிறவி மேதை. வாயைத் திறந்தா மடை திறந்த வெள்ளம் போல. அவரு பேச்சாலதான் இவ்வளவு கூட்டத்தை திரட்டியிருக்கிறார்.

**மணிமாறன் :** (சென்னையை நோக்கி விரையும் காரில் அமர்ந்து கொண்டு உதவியாளரிடம்) பரசுராம் இன்னைக்கு கூட்டம் சிறப்பா அமைஞ்சுடுச்சு. காலைலதான் கஷ்டப்பட்டு மனப்பாடம் செஞ்சேன். அடுத்த வாரம் பெங்களூர் கான்ஃபரன்ஸுக்கு மேட்டர் தயாரிச்சுட்டியா! சுற்றுப்புற சூழலும், தொழிற்சாலைகளும்ங்கிற டாப்பிக்கிற்கு கலெக்ட் பண்ணிக்கிட்டிருக்கே இல்லையா ? ரெண்டு நாளைக்கு முன்னே கொடுத்துடு. மனப்பாடம் செய்ய வேணாம் ?

— ஸ. ஜெ. சூர்யா

FREE E - BOOKS , www.thamizham.net.,

# வெளி நாடுகளில் இந்தியப் படங்கள்

இந்தியத் திரைப்படங்கள் நாளுக்கு நாள் முன்றாந்தரமான வணிக உத்திகளால் சீரழிந்து வருவது கசப்பான உண்மையாகும். வெளி நாடுகளில் இந்தியப் படங்களை வாங்குவோர் நாளுக்கு நாள் குறைந்து வருகிறார்கள் என்பதைக் கீழ்க் கண்ட பட்டியல் மூலம் நிரூபிக்கலாம் :

இந்தியப் படங்களின் ஏற்றுமதி விவரம் (ரூபாய்-லட்சங்களில்)

| மொழி | 1981-82 | 82-83 | 83-84 | 84-85 | 85-86 | 86-87 |
|---|---|---|---|---|---|---|
| இந்தி | 1,176.9 | 954.1 | 907.9 | 642.0 | 526.0 | 580.2 |
| தமிழ் | 147.8 | 139.9 | 115.9 | 81.0 | 67.7 | 46.6 |
| மலையாளம் | 132.4 | 121.2 | 90.1 | 59.5 | 66.9 | 49.9 |
| வங்காளி | 7.4 | 15.8 | 12.3 | 24.2 | 16.4 | 16.0 |
| தெலுங்கு | 3.4 | 2.7 | 3.3 | 19.0 | 11.0 | 10.4 |
| ஆங்கிலம் | 0.1 | 5.8 | 1.7 | 11.1 | 17.0 | 10.5 |
| கன்னடம் | — | — | 3 2 | 5.4 | 0.1 | — |
| பஞ்சாபி | 2.2 | 7.1 | 13.7 | 5.2 | 4.2 | 1.0 |
| குஜராத்தி | 0.8 | 4.4 | 3.6 | 1.3 | 2.1 | 0.1 |
| மராத்தி | 0.1 | 2.0 | 0.4 | 0.4 | 3 6 | 2.6 |
| ராஜஸ்தானி | — | 0.4 | — | — | — | — |
| உருது | — | — | 0.3 | — | 0.1 | — |
| போஜ்பூரி | — | — | — | — | — | 0.6 |
| அஸ்ஸாமி | — | — | — | — | 0.8 | — |
| கொங்கனி | — | — | — | — | 0.5 | — |
| சிங்களம் | — | — | — | — | 0.7 | — |
| சிந்தி | — | — | — | — | 0.1 | — |
| மொத்தம் | 1,471.1 | 1,253.4 | 1,152.4 | 849.1 | 717.2 | 717.9 |


## வேல் டைப்பௌண்டரி

- புதிய வகை 2 வண்ண அச்செழுத்துக்கள்
- எல்லா மொழி அச்செழுத்துக்கள்
- எல்லாவித அச்சக உபகரணங்கள்
- போஸ்டர் எழுத்துக்கள்

38, குட்டி தெரு,
பெருமாள் பேட்டை, சென்னை-7
தொ. பேசி. 27087


FREE E - BOOKS , www.thamizham.net.,

# வதந்தி பரப்பிகள்

'உள் கட்சி பூசலால் எம். ஜி. ஆர். தனது ஆட்சியை கலைத்து தேர்தல் நடத்தப் போகிறார்'
'ஜெயில்சிங் ராஜீவ் அரசை டிஸ்மிஸ் செய்வார்'
'மீண்டும் அவசர நிலை'
'அடுத்த முதல்வர் பண்ருட்டி ராமச்சந்திரன்'

மேற்கண்டவை பத்திரிகைகளில் அடிக்கடி வந்த செய்திகள். இதில் ஒன்று கூட தற்போதுவரை நடைமுறையாகவில்லை. ஆனால், மேற்கண்ட தலைப்புகளினால் வாசகனை ஈர்க்கச் செய்து பத்திரிகைகள் விற்பனையை அதிகரித்து கொள்கின்றன. ஏதோ சமூக சீர்திருத்தத்திற்காக செய்வது போல பாவ்லா காட்டிக் கொண்டு சில வார இதழ்கள் சூடாக வதந்திகளை விற்பனை செய்கின்றன.

வதந்திகள் கானகத் தீயைப் போல் பரவுகின்றன. எம். ஜி. ஆர். இறந்து விட்டார் என்று இறப்பதற்கு முன் பலமுறை வதந்தி பரப்பப்பட்டு கடைகள் சூறையாடப்பட்டன. கடைகளைக் கொள்ளையடிப்பதற்காக ரவுடி கும்பல் உருவாக்கிய வதந்தி அது. ஒரே நாளில் தமிழகம் முழுவதும் கலவரம் நிகழ்ந்தது. இதனால் வதந்தியின் வேகம் நமக்குப் புலப்படும். தி. மு. க. வும் அ. தி. மு. க. வும் ஒரு கட்சியை மற்றொரு கட்சி பலவீனப்படுத்த வதந்திகளை ஆயுதங்களாகப் பயன்படுத்தி வந்திருக்கின்றன.

எடுத்துக்காட்டாக 'பாலைவனரோஜாக்கள்' படம் வெற்றியடைந்ததும் கருணாநிதி அரசியலுக்கு முழுக்குப் போட்டுவிட்டு சினிமாவில் இறங்கப் போகிறார் என்று வதந்தி பரவியது. 'எம். ஜி. ஆர். சாவு இயற்கையானதல்ல' 'எம்.ஜி.ஆர். சமாதி மீண்டும் தோண்டப்படுகிறது. அவர் கட்டியிருந்த கடிகாரத்தில் இரவு தோறும் சப்தம் வருகிறது' என்றெல்லாம் சமீப காலத்தில் வதந்திகள் உலவிக் கொண்டிருக்கின்றன. வடநாட்டில் கமலஹாசன் இந்திப்பட உலகை பிடிக்க முயன்றபோது 'கமலஹாசன் ஆண்மையற்றவர்' என்கிற வதந்தி பரவி இமேஜை குறைக்க முயன்றது. 'சரிகாவுக்குப் பிறந்த குழந்தை என்னுடையதே' என்று அதனால் கமலஹாசன் நிரூபிக்க வேண்டியிருந்தது.

உண்மை வலிமையானது. ஆனால் வதந்தி கவர்ச்சிகரமானது. வதந்திகள் நிரந்தரமானவை இல்லையென்பதால் உலகம் முழுவதும் தோன்றித் தோன்றி அழிந்து கொண்டிருக்கின்றன.

—பார்வையாளர்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ரசிகர் மன்றத் தியாகிகள்



ஏழிசை மன்னர் எம். கே. தியாகராஜபாகவதர் அன்று தமிழகத்தையே கலக்கிய நடிகர். அவரது ஹரிதாஸ் படம் சென்னையில் 3 தீபாவளிகளைக் கடந்து ஓடி வரலாறு படைத்தது. ஆனால் அவருக்கு ரசிகர் மன்றம் என்று ஏதும் இல்லை. அப்போது உயர்தர ரசிப்பும், ரசிப்பிற்குரிய நடிப்பும் இல்லாமலில்லை. இருப்பினும் ரசிகர் மன்றங்கள் இல்லை.

இன்று பேபி ஷாலினி, தவக்களை, குள்ளமணி, சிலுக்கு, அனுராதா, ஜெயமாலினி, அனுஜா போன்றோர்க்குக்கூட ரசிகர் மன்றங்கள் இருக்கின்றன. நடிகராக ஒருவர் அறிமுகமாகும்போதே அவருக்கு ரசிகர் மன்றங்கள் தோன்றுகின்றன.

ரசிகர் மன்றங்கள் என்ன செய்கின்றன ? தங்கள் அபிமான நட்சத்திரம் தோன்றும் படம் ரிலீசான அன்று கட்-அவுட் வைப்பது, தோரணம் கட்டுவது, மொத்தடிக்கெட்டுகளின் பாதியை தாங்களே வாங்கி நண்பர்களுக்கு வழங்குவது, ஹீரோ திரையில் தோன்றும்போது கைதட்டி விசிலடிப்பது, வசனம் பேசினால், காதல் செய்தால், சண்டை போட்டால் விசிலடித்து ஆரவாரிப்பது போன்ற பணிகளைச் செய்கின்றன.


25 பேர் இருந்தால் ஒரு ரசிகர் மன்றமும், 10 மன்றங்கள் இருந்தால் தலைமை ரசிகர் மன்றங்களும் அமைத்துவிடுகிறார்கள். உறுப்பினர் கட்டணம் ஒரு ரூபாய்தான். எனவே இந்த மன்றங்களின் செலவுக்குப் பணம் கொடுப்பது ஹீரோதான். ஹீரோ தனது கறுப்புப் பணத்தை வெள்ளையாக்குவது, தனது மார்க்கெட்டை நிலைநிறுத்திக் கொள்வது, முடிந்தால் இதனைப்பயன்படுத்தி அரசியலுக்கு நுழைவது என்ற அளவில் ஆர்வக் கோளாறு மிகுந்த, வளராத பாமர மக்களைக் கொண்டு தங்கள் சுயநலத்திற்காக அமைத்துக்கொள்ளும் பட்டாளமே இந்த ரசிகர் மன்றங்கள்.

இந்தமாதிரி அவலங்கள் தமிழகம் தவிர வேறெங்கும் இப்படிச் செழிக்கவில்லை. இதற்கெல்லாம் முன்னோடி எம்.ஜி.ஆர்தான். அவருக்கு அகில உலக ரசிகர் மன்றமே இருந்தது. இதில் உறுப்பினர்கள் ஒரு கோடி பேர். சிவாஜி ரசிகர் மன்றத்தில் 3 லட்சமும், பாக்கியராஜ் ரசிகர் மன்றத்தில் 6 லட்சம் உறுப்பினர்களும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

அரசியல் கட்சி அடிமட்டத் தொண்டனும், ரசிகர் மன்ற உறுப்பினறும் பாவம் உண்மையான தியாகிகளே ! இவர்களின் அப்பழுக்கற்ற உழைப்பில் தான் அரசியல்வாதியும், நடிகனும் கொழுக்கின்றனர்.

—ஸ்டெனிஸ்லாஸ்

FREE E - BOOKS , www.thamizham.net.,




# ஜப்பானின் இன்னொருப்பக்கம்

ஜப்பான் ஒரு சொர்க்க பூமி என்று பலரும் கருதுகின்றனர். ஆனால்—

- "செய்யும் தொழிலே தெய்வம்" என்று போற்றப்படுகின்றன. ஜப்பானிலும் தொழில்களில் உயர்வு தாழ்வு உள்ளது. மிருகங்களைக் கொன்று தோலை உரிக்கும் தொழில் இங்கு கேவலமாகக் கருதப்படுகிறது. இந்தத் தொழிலைச் செய்வோர் பொராக்கு மக்கள் என்று அழைக்கப்படுகின்றனர்
- 30 லட்சம் பொராக்கு மக்கள், ஜப்பானில் வாழும் பரம்பரை மக்களாயினும் இவர்கள் ஒதுக்கப்பட்டு தனித்து வாழ்கின்றனர். பிற ஜப்பானியருடன் திருமண உறவு வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை.
- பொராக்கு மக்கள் வளமான ஜப்பானில், தகுதியான வீடில்லாமல் தெருக்களிலும் குழாய்களிலும் வாழுகிற நிலை வேதனைக் குரியது. பனி கொட்டுகிற காலங்களில் 300 பேர் வரை பிற ஜப்பானியர்களின் மனிதாபிமானமின்மையால் மடிகின்றனர்.
- பொராக்கு மக்களுக்கென தனியாகவும், பிற ஜப்பானியர்களுக்குத் தனியாகவும் புத்த ஆலயங்கள் காணப்படுகின்றன. இந்திய ஜாதியத்தை எதிர்த்து சீறிக்கிளம்பிய புத்தமதம் ஜப்பானில் இந்த ஏற்ற தாழ்விற்கு இடமளிக்கிறதே. ஆலயங்களில் மட்டுமல்ல இடுகாடுகளிலும் பொராக்கு மக்களுக்குத் தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.
- பிறரை எதிர்பார்க்காத இயல்பும், உதவ வேண்டும் – பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற இயல்பான ஆர்வமும் ஜப்பானிய கலாச்சாரத்தில் இல்லாததால், வசதி குறைந்தோர் (தங்கையாயினும்) இயலாமையை வெளிப்படுத்துவதும் இல்லை, வசதியானோர் (அண்ணனாயினும்) உதவ முன் வருவதும் இல்லை.
- உள்ளத்து உணர்ச்சிகளைப் பிறரிடம் பகிர்வது இவர்களுக்குப்பிடிக்காதது. சிறு குழந்தைகள் கூட பிறர்முன் அழுவதைத் தவிர்க்கின்றனர். ஊசிப் போடும் மருத்துவமனைப் பகுதிகளில்கூட குழந்தைகளின் அழுகை சத்தம் கேட்பது அபூர்வம். வயதானவர்கள், இளைஞர்கள், ஏன் குழந்தைகள் கூட இங்கு பெருமளவில் தற்கொலையைத் தழுவுகிறார்கள். உலகில் அதிக தற்கொலை நடக்கும் நாடுகளில் ஜப்பானும் ஒன்று.

—ஜப்பானிய மண்ணில் நேரில் கண்டவர் : ஆர். டி. ராஜன்

FREE E - BOOKS , www.thamizham.net.,



# பெயருக்கு முன்னால் இருக்கும் எழுத்து

பெயருக்கு முன்னால் நாம் வைத்திருக்கும் "இனிஷியல்" எனப்படும் எழுத்து நம் தந்தையாரையே குறிக்கிறது. இப்படிப் போடுவதே பெருவழக்கமும் உள்ளது.

அண்மையில் ஒரு பத்திரிகைத் துணை ஆசிரியரைச் சந்தித்த போது பெ. அ. தமிழ்மணி என்ற அவரது பெயருக்கு முன் உள்ள இரு எழுத்துகளுக்கு விளக்கம் கேட்ட போது தந்தை பெயரான பெருமாள் தாய் பெயரான அகிலாண்டம் இருவரையும் குறிப்பிடுவதாகச் சொன்னது சிந்திக்க வைத்தது.

ஆண் ஆதிக்க சமுதாயத்திற்கு அங்கீகாரம் அளிப்பது போலல்லவா நம் பெயர் முன் எழுத்து அமைகிறது. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்ற வரிகளை இளமையில் சொல்லிக் கொடுக்கும் தமிழகத்தில், தாய் மட்டும் ஏன் ஒதுக்கப்பட வேண்டும்?

நாம் இந்த உலகத்தில் தோன்றுவதற்குத் தந்தையை விட, அதிக சிரமத்தை அனுபவிப்பது தாய் தானே. 10 மாதம் சுமந்து பெற்ற தாயின் பெயரையும் தந்தையின் பெயரோடு இணைத்து வைத்துக் கொள்வது தானே முறையாகும். இந்தத் தாய்க்கும், இந்தத் தந்தைக்கும் மகனாகப் பிறந்த இன்னான் என்று தெளிவாகத் தெரியும் வண்ணம் இரு எழுத்துகளை அமைப்பது பெற்றோர் இருவரையும் உயர்த்துவதாக அமையுமே.

பெண்ணுரிமையைப் பற்றி வாய்கிழிய பேசுவோர் கூட இது வரை தன்னைப் பெற்ற பெண்ணின் பெயரையும் தன் பெயருக்கு முன்னால் வைத்துக் கொள்வது பற்றி இன்னும் சிந்திக்கவில்லை.

ஊர் பெயரைம், தாத்தா பெயரையும் தங்கள் பெயருக்கு முன் வைத்துக் கொள்வதை விட, தாய் பெயரை தனது பெயர் முன் எழுத்தில் இணைப்பது சீர்திருத்தமாகும், பெணமைக்கு சிறப்பு செய்வதாகும்.

இனி புதிதாக பிறக்கும் குழைந்தைகளுக்கேனும் பள்ளியில் பெயர் தரும் போது பெற்றோர், தங்கள் இருவரின் பெயரையும் இணைத்துத் தரலாமே.

—அஞ்ஞானி

ஆசிரியர் : கு. நாராயண பாரதி, வெளியிடுபவர் : கி. இராமச்சந்திரன், அச்சிடுபவர் : எம். எஸ். ரவீந்திரன். ரவீந்திரன் பிரஸ், 137, டாக்டர் நடேசன் ரோடு, சென்னை-600 005 முகவரி 1494, அண்ணா நகர், சென்னை-600 040.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# பொதுவிடங்களில் புகை பிடிக்கும் உரிமை

இராஜேந்திர பிரசாத் ஜனாதிபதியாவதற்கு முன்னதாக நடந்த நிகழ்ச்சி இது.

அவர் ஒரு முறை, பாட்னாவிலிருந்து சொந்த ஊருக்குப் புகை வண்டியில் பயணம் செய்து கொண்டிருந்தார்.

அவருக்கு எதிர்ப்புறமாக ஓர் இளைஞன் அமர்ந்திருந்தான். அவன் ஓயாமல் சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தான். அவன் வெளிவிடும் சிகரெட் புகை இராஜன் பாபுவின் முகத்தை நோக்கியே வந்து கொண்டிருந்தது. அது அவருக்குப் பெருத்த சங்கடமாய் இருந்தது.

அவர் அந்த இளைஞனை நோக்கி, 'தம்பி, நீ புகைக்கும் சிகரெட் உனக்குச் சொந்தமானதுதானே, வேறு யாருடையதும் அல்லவே?'' என்று கேட்டார்.

இளைஞன் சிகரெட் புகையை வேகமாக இழுத்து வெளியே விட்டவாறு, "நான் புகைக்கும் சிகரெட் என்னுடையதாக அல்லாமல் உங்களுடையதாகவா இருக்க முடியும்?" என்று கம்பீரமாகக் கேட்டான்.

"அதைத்தான் உனக்குச் சொல்ல வந்தேன், தம்பி. சிகரெட் முற்றிலும் உனக்குச் சொந்தமாக இருக்கும்போது அதன் புகையும் உனக்குச் சொந்தமானதாகவே தானே இருக்க முடியும்? ஆனால், உனக்குச் சொந்தமான புகையை எனக்குச் சொந்தமான முகத்தின் மீது அல்லவா ஊதித் தள்ளுகிறாய்!'' என்று இனிய குரலில் இரஜேந்திர பிராசாத் கூறினார்.

அதற்கும் பிறகு இராஜேந்திர பிரசாத் புகை வண்டியை விட்டு இறங்கும்வரை அவன் புகை பிடிக்க வில்லை.

[நன்றி : மேதைகளின் நகைச்சுவை, மணிமேகலைப் பிரசுரம்]


## சுட்டி

தொடர்பு முகவரி:
AP 638, H பிளாக், அண்ணா நகர்,
சென்னை-600 040

சுட்டி ஆண்டுச் சந்தா: ரூ. 10
ஆயுள் சந்தா: ரூ. 150


FREE E - BOOKS , www.thamizham.net.,

Regd. No. TN/MS(N)/317

# அரசியல் சிரிப்புகள்

✳ தி. மு. க. தொண்டர்கள் கையேந்தி பிச்சையெடுத்தார்கள். ஒன்றரைக் கோடி ரூபாய் செலவில் அண்ணா அறிவாலயம் கட்டினோம்.

— *மு. கருணாநிதி*

✳ அ. தி. மு. க. வின் இரண்டு அணிகளையுமே உண்மையான தமிழர்கள் ஆதரிக்கக் கூடாது.

— *ம. பொ. சிவஞானம்*

✳ எனக்கு என்ன தெரியும் என்கிறார்கள். எம். ஜி. ஆர். பல்கலைக் கழகத்தில் 40 ஆண்டுகள் பயின்றவள் நான். என்னை அமுமூஞ்சி என்கிறார்கள்.

— *ஜானகி*

✳ என் தலைவனின் பிணத்தின் மீது நின்று கொண்டு பகல் கொள்ளைக்காரனைப் போல் ஆட்சியை கொள்ளையடித்துவிட்டது மத்திய அரசு.

— *ஆர். எம். வீ.*

✳ தமிழகத்தில் காங்கிரஸை எல்லோரும் தாக்குகிறார்கள். இதனாலேயே காங்கிரஸ் பலமான கட்சி என்பது தெரிகிறதல்லவா ?

— *ஜி. கருப்பையன்*

✳ அடிப்படையில் நான் ஒரு எழுத்தாளன். சினிமா சான்ஸ் எனக்குக்கிடைக்காவிட்டால் ஒரு பத்திரிகையிலாவது எழுத்தாளனாக இருந்திருப்பேன்.

— *டி. ராஜேந்தர்*

✳ என் ஒரு மன்றத்த கலைக்க ஜெயலலிதா ஆளுங்க 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறாங்க!

— *பாக்யராஜ்*

✳ பாராளுமன்ற தேர்தல் வந்தால் மதுரையில் போட்டியிட M. P. சீட் கேட்பேன். சட்டமன்ற தேர்தல் வந்தால் தி. நகர் தொகுதி கேட்பேன். நடனமாடியே சிவாஜியை தோற்கடிப்பேன்.

— *நடிகை தீபா*

✳ நான் சின்ன வயசில் எம்.ஜி.ஆர். ரசிகன். அதனால் எம்.ஜி.ஆர். கட்சியில் இருந்து நல்ல விஷயங்களை சொல்ல வந்தேன்.

— *நடிகர் ராமராஜன்*

http://www.thamizham.net FREE E-BOOKS (TAMIL) தமிழகம்
FREE E - BOOKS , www.thamizham.net.,